உ
சிவமயம்

Registered as a News Paper in Ceylon [RBN 9/809-69]

விலை சதம் 15
வருடச் சந்தா :- ரூபா 5

'ஆகமமாகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க'

'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க'

# சைவ காவலன்

மாதம் இருமுறை வெளிவரும் சைவ வெளியீடு

சௌமிய ஹூ மார்கழி மீ 17 உ வியாழக்கிழமை

மலர் 1 | அகில இலங்கைச் சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை, தெல்லிப்பழை [1-1-70] | இதழ் 8

# இந்து (சைவ) பல்கலைக்கழகம் வேண்டும்

## அதை யாழ்ப்பாணத்திலேயே தாபித்தலும் வேண்டும்

இந்து (சைவ) சமயத்தையும் கலாசாரத்தையும் தொன்றுதொட்டுச் சைவ மன்னர்கள் பேணிக் காத்து வளர்த்துவந்தார்கள். அன்னிய அரசாங்கத்தின் ஆட்சியிலும் குருகுலக் கல்வி முறையிற் தகுந்த குருவைத்தேடி மாணுக்கர்கள் சென்று கல்வி கற்றும், சைவாபிமானிகள் சைவப் பள்ளிக்கூடங்களைத் தாபித்து அரசாங்க உதவியுடன் சைவமுறையிற் கல்வி கற்பித்தும் சமயப் பற்றும் நற்பண்பாடும் உள்ள சைவ சமூகத்தை உருவாக்கி வளர்த்து வந்தார்கள்.

இலங்கை மக்கள் சுதந்திரம் பெற்ற பின்னர் காலத்திற்குக் காலம் ஒவ்வொரு கல்வி மந்திரியும் மனம்போன போக்கெல்லாம் அரசியற் கண்ணூடாக நோக்கிக் கல்வித் திட்டங்களை மாற்றி மாற்றி அமைத்தலின் மூலம் சமயக் கல்விக்கும் கலாசாரத்திற்கும் முக்கிய இடம் இல்லாமற் செய்ததனுல் சமய அறிவும் சைவ கலாச்சாரமும் தேய்ந்து நிற்கும் நிலைமையில் அரசாங்கம் பள்ளிக்கூடங்களை நடாத்தும் பொறுப்பையும் எடுத்ததுடன் சைவ சமயத்திற்கும் கலாசாரத்திற்கும் முற்றுப்புள்ளி போடப்பட்டதாகவே கருதவேண்டியிருக்கின்றது. இதனுற் சைவ மக்களிடத்திற் சமய அறிவு, நல்லொழுக்கம் முதலியவை குன்றித் துன்ப வாழ்வே இடம்பெற்று வருகின்றது. இந்நிலைமையை மாற்றிச் சைவ மக்கள் முன்போல இன்ப வாழ்வைப் பெற்றுய்ய வேண்டுமெனின், சைவசமய கலாசார அடிப்படையில் எதிர்காலச் சமூகத்தினர் பள்ளிக்கூடங்களிற் கல்வி பெறல்வேண்டும். அக்கல்விக்குச் சர்வகலாசாலை நிலையிலும் அந்தஸ்து இருக்க வேண்டும். இதற்கு ஒரு சைவ கலாசார பல்கலைக்கழகம் அத்தியாவசியமாகும்.

சரித்திரரீதியிற்கூடச் சைவ மக்களின் முன்னைநாள் வாழ்க்கைப் பெருமையைப்பற்றிச் சிந்திக்குமிடத்து, இலங்கையின் நான்கு திக்குகளிலும் மிகப்புராதன சைவக் கோவில்களாகிய நகுலேஸ்வரம், கோணேஸ்வரம், கதிர்காமம், திருக்கேதீஸ்வரம் இருப்பது ஒருகாலத்தில் இலங்கை முழுவதும் சைவசமயம் பரவி இருந்ததென்பதற்குச் சான்றுகும். இப்பேர்ப்பட்ட சைவ நாட்டில் இன்று சைவமும், பௌத்தமும் பிரதான சமயங்களாயுள்ளன.

பௌத்த சமயத்தையும் கலாசாரத்தையும் பேணிக் காத்து வளர்ப்பதற்கு இலங்கையில் வித்தியோதய, வித்தியலங்காரவெனும் நாமங்களையுடைய பௌத்த பல்கலைக்கழகங்கள் உண்டு. மேலும் அநுராதபுரத்தில் பௌத்த குருமார் பயிற்சிப் பல்கலைக்கழகம் ஒன்று தாபிப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துவருகின்றது. அது மாத்திரமன்றி அரசாங்கப் பொதுப்பணத்திலிருந்து வருடந்தோறும் லட்சக்கணக்கான பணத்தைப் பௌத்த சமய விடயங்களிற் செலவிட்டு வருகின்றது. இவற்றுள் நூறிலொரு பங்குதானும் சைவத் துறையிற் செலவிடப்படவில்லை. இஸ்லாமிய சமயத்தையும் கலாசாரத்தையும் பேணி வளர்ப்பதற்கு ஓர் பல்கலைக்கழகம் தாபிப்பதற்கு அரசாங்கம் வாக்களித்துள்ளது.

இந்த நிலைமையில் சைவ மக்களும் தங்கள் சமயத்தையும் கலாசாரத்தையும் பேணிக் காத்து வளர்ப்பதற்கு ஓர் இந்து (சைவ) பல்கலைக்கழம் அத்தியாவசியமானது. இதைத் தாபித்துக்கொடுப்பது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். பாரபட்சமின்றி அரசுபுரியும் அரசாங்கமாயிருந்தால் இக்கடமையை மிகச் சிரத்தையுடன் விரைவில் நிறைவேற்ற வேண்டும். இப் பல்கலைக்கழகத்திற் பலதுறைக் கல்விகளுக்கும் இடமளிக்கவேண்டும். பிற சமயத்தினரும் இங்கு கல்விகற்கலாம். கிறீஸ்தவ பள்ளிக்கூடங்களில் ஏராளமான சைவப்பிள்ளைகள் கல்விகற்று வருவது யாவரும் அறிந்த உண்மை. அங்ஙனமாக கிறீஸ்தவ, இஸ்லாமிய பிள்ளைகள் சைவப் பல்கலைக்கழகத்திற் கல்வி கற்க அஞ்சுவது ஏனே?

இப்பேர்ப்பட்ட ஓர் இந்து பல்கலைக்கழகத்தை எங்கு தாபித்

(6-ம் பக்கம் பார்க்க)

# சமஸ்கிருத அர்ச்சனை நிர்ணயம்

## ஆரியமும் தமிழும்

— சிவஸ்ரீ. ச. குமாரசாமிக் குருக்கள் —

(முற்றொடர்)

### பொது மொழி

மேலும் நமது தமிழ் நாட்டிலும் ஏனைய நாடுகளிலுமுள்ள சைவாலயங்களிலும், விட்டுணுவாலயங்களிலும் பிரதிட்டை, உற்சவம், பூசையாதியன வடமொழி வேதங்களிலும் வடமொழி யாகமங்களிலும் உள்ளவாறே அம்மொழியாலுள்ள வாக்கியங்கள் மந்திரங்களைக் கொண்டே நடைபெறுகின்றன. இன்னும் தமிழ் நாட்டிலும் மற்றைய நாடுகளிலுமுள்ள சைவ வைஷ்ணவ மடங்களிலும் நித்திய நைமித்திக அநுட்டானங்களுக்குத் தமிழ்த் தேசிக மூர்த்திகளும் மற்றையோரும் பண்டுதொட்டுக் கைக்கொண்டு வருவதும் ஆரிய பாஷா மந்திரங்களேயாம். சைவத் தேசிகரென்ற குருமாரும் தமக்கும் பிறருக்கும் சுபாசுப கிரியைகளில் ஓதும் வாக்கியங்கள் மந்திரங்கள் ஆரியமாகவே இருப்பதினுலும், சமய, விசேட, நிருவாண தீட்சை, ஆசாரியாபிஷேக விதிகளெல்லாம் தொன்றுதொட்டு ஆரியத்திலே அமைந்து அவ்வாறே நடைபெறுவதினுலும், சைவ வேளாளர் பாரம்பரியமாக அனுசரித்து வரும் சிவபூசைக்கு இன்றியமையாதனவாகிய சங்கிதா மந்திரம், பதமந்திரம், சிவகாயத்திரி, பிராசாதம் முதலிய மந்திரங்களெல்லாம் ஆரியமாகவே நிலைபெற்றிருப்பதினுலும், பதினெருமந்திரம், எண்பத்தொரு பதம், ஐம்பத்தொரு வர்ணம், இருநூற்றிருபத்துநான்கு புவனம், முப்பத்தாறு தத்துவம், ஐந்து கலையென்னும் ஆறத்துவாக்களும் கலாசோதனையில் நியமிக்கப்படுவனுலும், மந்திரம், பதம், புவனம், தத்துவம் கலையென்னும் ஆறத்துவாக்களுமில்லாவிடின் நிருவாண தீட்சையே நிகழப்பெறுது ஆதலானும் நமது நாட்டில் ஆரிய மொழியானது தான் உற்பத்தியான காலந்தொட்டு நிகழப்பெற்று வருகின்றதென்பது தாபிக்கப்படும்.

### திருமந்திரம்

"தத்துவமாறுறு தன்மனு
வேழுகோடி
மெய்த்தகு வன்னமைம்பா
னென்று மேதினி
ஒத்திரு நூற்றிருபானுன்
கெண் பானென்று
வைத்த பதங்கலை

யோரைந்தும் வந்ததே."

ஆரிய மொழியானது எல்லாத் தேயத்திற்கும் விண்ணுலக முதலியவற்றிற்கும் பொது மொழியென்ற கருத்தைச் சிவஞான சுவாமிகள் நன்னூல் விருத்தியுரைத் திருத்தத்தில் பின்வருமாறு விளக்குகின்றார்கள்:

வடக்கும் ஒரு திசையன்றே, திசைச் சொல்லன்றி வடசொல்லெனக் கூறுவது என்னை எனில், தமிழ் நாட்டிற்கு வடதிசைக்கண் பதினெண் மொழிகளுள் ஆரியமொழியுமுளதேனும், தென்மொழிக் கெதிரியது கடவுட்சொல்லாகிய வடமொழியொன்றுமே யென்பது தோன்ற அவற்றுள் தமிழ் நடைபெற்றதை வடசொல் என்றும், ஏனையவற்றுள் தமிழ் நடை பெற்றதைத் திசைச்சொல்லென்றும் சான்றோரால் நியமிக்கப்பட்டன என்க. அன்றியும் ஆரியச்சொல் எல்லாத் தேயத்திற்கும் விண்ணுலக முதலியவற்றிற்கும் பொதுவாகலான் அவ்வாரியச் சொல் தமிழ் நடைபெற்றதைத் திசைச்சொல் என்றல் கூடாதெனக் கோடலுமாம். அங்ஙனமாயின் வடசொல்லென்

(6-ம் பக்கம் பார்க்க)

உ

திருச்சிற்றம்பலம்



நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

— தேவாரம்.


# சைவ காவலன்

சௌமிய ௵ மார்கழி மீ 17 உ

மலர் 1] அகில இலங்கை [இதழ் 8

சைவஅனுட்டான பாதுகாப்புச்சபை, தெல்லிப்பழை.


## வேலி பயிரை மேய்வதா?

சைவம் அநாதியானது: சைவாலயங்களும் அநாதியானவை. சைவாலயங்களின் கருவூலங்களாய்த் திகழும் இலிங்கத் திருமேனிகளும் காலங் கடந்தவை. காலங் கண்ட பழம் முனிவர்களாற் பூசிக்கப்பட்டும் உபாசிக்கப்பட்டும் பேணப்பட்டவை. அவற்றின் அருமை பெருமைகளை அநுபவ வாயிலாக உணர்ந்து அன்றைய அரசர் பெருமக்கள் ஆர்வமிகுதியாற் கட்டியெழுப்பிய கட்டிடப் பொலிவோடு இன்றும் கம்பீரமாகக் காட்சியளிப்பன தமிழ் நாட்டுச் சிவாலயங்கள். அவை எந்தெந்த ஆகம விதிக்கிணங்க அமைந்தனவோ அந்தந்த ஆகம விதிகளுக்கிணங்கவே ஆங்காங்கு பூசை விதிமுறைகளும் அவ்வம் மன்னரால் வகுக்கப்பட்டொழிந்தன. இவை தவிரப் பிற்காலத்தில் தோன்றிய சிவாலயங்கள் தாமும் அப்பழைய சிவாலயங்களின் நினைவாகவே ஆங்காங்குள்ள சித்தர்கள் பக்தர்களால் ஏற்படுத்தப்பட்டு எந்த எந்தச் சிவாலயத்தின் நினைவாக அவை எழுந்தனவோ அந்த அந்தச் சிவாலய விதிமுறைகளுக்கிணங்க நடைபெற்று வருபவை.

அன்றைய அரசர் பெருமக்கள், விசேடமாகப் பல்லவ, சோழ, நாயக்கப் பெருமக்கள் பரிபாலித்த கோயில்கள் அனைத்தும் ஆகம விதிக்கிணங்கவே அமைந்துள்ளமைக்கு அவர்தம் கல்வெட்டுக்கள் என்றும் அறிகரியா யமைந்துள்ளன.

காலப்போக்கிலே பழைய அரச பரம்பரைகள் அற்றொழிந்து வேற்று நாட்டார் தமிழகத்திற் கால் வைத்தபோது அவ்வரசப் பெருமக்களின் ஆலய பரிபாலனப் பணியை மேற்கொண்டு நடத்தவும், நடப்பிக்கவும் சைவ ஆதீனங்கள் தோன்றின. அச் சைவாதீனங்கள் சிவாலயங்களிற் சிலவற்றைத் தமது நேர்முக பரிபாலனத்தின் கீழ் அமைத்தும் ஏனையவை ஆகம விதிமுறை வழுவாது செவ்வனே நடைபெறுதற்குத் தம் கண்காணிப்பின் கீழ் வேண்டுவனவெல்லாம் புரிந்துதவியும் வந்தன. எனவே, முனிவர் பரம்பரையுமற்று அரசர் பரம்பரையுமற்று முடிந்த காலந் தொடக்கம் சிவாலய விதிமுறைகளின் பரிபாலனத்துக்கு ஆதீனங்களே மேலெல்லையிலுள்ள அதிகாரபீடங்களாயின எனலாம். சிவாகம விதிமுறைப் பிரகாரம் சிவதீக்ஷை பெற்ற அந்தணர்கள் மட்டுமே ஆலயங்களின் கருவறைகளிற் கால் வைத்தல் கூடும். அவருள்ளுஞ் சிவபூசைக் கிரமமுள்ள சிவாசாரியர்கள் மட்டுமே மூர்த்திகளின் திருமேனி தீண்டுதல் கூடும். இவ்வரம்பை மீறி அல்லாதார் உட்புகுதலும், திருமேனி தீண்டுதலும் ஆங்காங்குள்ள தெய்வ சாந்நியத்தைக் கெடுத்துச் செல்வோர்க்கும் தீண்டுவோர்க்கும் தீராக் கொடும் பாவத்தையும் விளைவிப்பதாகும்.

இது இங்ஙனமாக, இன்று தமிழ் நாட்டில், குறிப்பிட்ட ஆதீனமொன்று தன் நேர்முக பரிபாலனத்தின் கீழுள்ள ஆலயங்கள் சிலவற்றில் அவற்றின் பாரம்பரியமான ஆகம விதிமுறைகளுக்கு மாருகச் சில சில நவீனங்களைப் புகுத்த முயன்றுவருஞ் செய்தி கேட்டுச் சைவவுலகம் திடுக்கிட்டுப்போகின்றது. சிவாலய விதிமுறை யொழுங்குகளுக்கு வேலியாக நாட்டப்பட்ட ஆதீனமே அவற்றை அழித்தொழிக்க முற்படுதல் அடுக்குமா?

குறித்த ஆதீனம் தனது கண்காணிப்பிலுள்ள ஆலயங்கள் சிலவற்றில் இன்னர் இனியார் என்னது எல்லாரும் உட்புகுந்து, இதாகிதமறியாது அனைவரும் அங்குள்ள மூர்த்திகளைப் பரிசித்துத் தரிசிக்க வைக்கவேணுமென்று ஒரு முஸ்தீப்பை மேற்கொண்டுள்ளதாம். ஆகம விதிமுறைகளை அநாயாசமாக் அழித்தொழிக்க முயலும் அவ்வாதீனத்தின் அடங்காப் பிடாரித் தனத்தைக் கண்டு சகிக்காது அவ்வாலயங்களைச் சார்ந்த அர்ச்சகர்களும் அடியார்களும் நீதிமன்றம் மூலமாக அதற்குத் தடையுத்தரவு பிறப்பித்துள்ள செய்தி கேட்டுச் சைவவுலகம் இறும்பூ தெய்துகின்றது. எனினும், இது இடைக்காலத் தடையுத்தரவே யாதலின் நிரந்தரமான தடையுத்தரவு விதிக்கப்பட்டொழியும் வரையிலும் சைவவுலகம் கண்ணுறங்கற் கேதுவில்லையாகும்.

இவ்விஷயத்திற் சைவ நன்மக்கள் எந்நாட்டாராயினும் எவ்வினத்தாராயினும் உணர்வினல் ஒன்றுபட்டுச் சைவாலயங்களின் புனிதத் தன்மை நிலைபெறத் தத்தம் கடமைகளைச் செய்தேயாக வேண்டுமென்பது சைவ காவலனின் பிரார்த்தனையாகும்.

# பெரியபுராணம்

— புலவர் த. குமாரசாமிப்பிள்ளை —

(முற்றொடர்)

### திருமலைச் சருக்கம்

பெரிய புராணம் என்னும் காவியத்துக்குக் கதாநாயகர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவருடைய வரலாறு திருக்கைலாசத்தில் இருந்து வருவதாகும். ஆதலால், திருக்கைலாசத்தின் சிறப்பைப் பற்றிக் கூறத்தொடங்கி, உபமன்னியு முனிவர் வாக்கில் வைத்து, சுந்தரமூர்த்தி நாயனர் வரலாறும் சுருக்கமாகக் கூறத் தொடங்கினர் சேக்கிழார்.

எல்லாவுயிர்களும் செய்த புண்ணியமெல்லாந் திரண்டு வெள்ளியின் ஒளி வீசி விளங்குவது திருக்கைலாசமலை. அதில் ஸ்ரீ கண்ட பரமேஸ்வரன் நித்திய சாந்நித்தியராய் வீற்றிருந்தருளுவர். பிரமா, விட்டுணு, இந்திரன் முதலிய தேவர்களும் தெய்வ மகளிரும், கருடர், காந்தருவர், சித்தர், வித்தியாதரர் முதலான கணத்தவர்களும் வந்து அங்கு வழிபட்டுத் தங்கள் தங்கள் குறைகளை நீக்கி வேண்டிய வரம் பெற்றுச் செல்வர்.

திருக்கைலாயத்தில் காவல் புரிந்து வீற்றிருப்பவர் திருநந்திதேவராவர். அம்மலையின் அடிவாரத்தில் உபமன்னியு முனிவர் பல முனிவர்கள் தம்மைச் சூழ வீற்றிருக்கும் பொழுது தென்திசையில் இருந்து ஆயிரகோடி சூரியர் ஒருங்கு கூடியது போன்ற பேரொளியொன்று தோன்றக் கண்டு இரு கரங்களும் சிரசிற் குவிய கண்களிலிருந்து ஆனந்த வாரி சொரிய அத்திசை நோக்கிச் சென்றார். அது கண்ட முனிவர்கள் 'சம்புவின் அடித்தாமரைப் போதலால் எம் பிரான் இறைஞ்சாய் இது என்'னென வினவினர். 'தம்பிரானைத் தன்னுள்ளந் தழுவிய வன் நம்பியாரூரன் நாம் தொழுந் தன்மையான்' என்றார் உபமன்யு. பேரொளி வடிவாய் வரும் அவரது தவத்தின் மேன்மையை நாம் கேட்கும் பெருவிருப்புடையோம். அருளிச் செய்க என்று வேண்டினர். திருக்கைலாசத்தில் எம்பிரானுக்குச் சாத்துகின்ற மலர் மாலையும் திருவெண்ணீறும் பொற்றும் பாளத்தில் வைத்து ஏந்திச் செல்பவர் ஒருவர் உளர். அவர் பெயர் ஆலால சுந்தரர். ஒரு நாள் எம்பிரானுக்கு மாலை தொடுத்துச் சாத்துதற்குரிய மலர்கள் கொய்யும்படி நந்தவனத்திற்குச் சென்றார். உமையம்மையாருக்குச் சாத்தற்குரிய மலர்கள் கொய்ய அநிந்திதை, கமிலினி என்னும் அம்பிகையின் சேடியர் இருவர் அங்கு மலர் கொய்து நின்றனர். மாதவஞ் செய்த தென்திசை வாழவும் தீதிலாத் திருத் தொண்டத் தொகை பாடவும் அவதரிப்பவராகிய ஆலாலசுந்தரர் அவர்கள் மேல் திருவருளால் மனத்தைச் செலுத்தினர். அவர்களும் இவரைப் பார்த்து மனதைச் செலுத்தினர். மலர் கொய்து கொண்டு சேடியர் அம்பிகையிடம் செல்ல ஆலால சுந்தரரும் சிவபெருமான் சந்நிதியை அடைந்தார். சிவபிரான் அவரைப் பார்த்து, ''சுந்தரா, நீ மாதர் மேல் மனம் வைத்தனை. தென் திசையின் கண்ணே தோன்றி அம்மங்கையருடன் காதலின்பம் கலந்திருந்து பின் வருவாய்'' என்றருளிச் செய்தார். ஆலால சுந்தரர் கைகள் அஞ்சலி கூப்பிக் கலங்கி, ''செய்ய சேவடி நீங்கும் சிறுகையேன் மையல் மானுடனய் மயங்கும் வழி ஐயனே தடுத்தாண்டருள் செய்யென'' வேண்டினர். அங்ஙனமே ஆகுக என்று இறைவன் அருளிச் செய்தனன். ஆஞ்ஞையின்படி தென்திசையில் அவதரித்த அம்மங்கையருடன் வாழ்ந்து அநேக அற்புதங்கள் செய்து பலதலங்களிலுஞ் சென்று இறைவனைத் தேவாரப் பதிகங்களினல் துதித்து இப்பொழுது எம்பிரான் திருவருளால் திருக்கைலாசம் நோக்கி வருகின்றனர். அதுவே இப்பேரொளியாகும் என்று சுருக்கமாகக் கூறினர். முனிவர்கள் பின்னும் வணங்கி எல்லாத் திசைகளிலும் தென்திசை மேம்பட்டு விளங்குவதன் காரணம் யாதென வினவினர். புண்ணிய நதிகள் பலவுள்ளன. உயிர்கள் மனம், வாக்கு, காயம் மூன்றினலும் வழிபட்டு உய்வதன் பொருட்டு எம்பெருமான் அருளுருக் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற அநேக சிவாலயங்கள் அமைந்திருக்கின்றன. அவைகளை வழிபட்டு அளவில்லாத அடியவர்கள் பேரின்பப்பேறு பெற்றனர். ஆதலால் எத்திசைகளிலும் தென்திசை மேம்பட்டது என்று உபமன்யு முனிவர் கூறினர்.

(தொடரும்)

### வேதாகம சைவசித்தாந்த சபை நிர்வாகசபைக் கூட்டம்

அகில இலங்கை வேதாகம சைவசித்தாந்த சபையின் நிர்வாக சபைக் கூட்டம் 1-1-70 வியாழக்கிழமை மாவை வேதாகம நூல் நிலையத்தில் நடைபெற்றது. சைவ சமயம் குன்ருது பாதுகாத்த நாவலர் போன்ற வீரர்களின் சில சிறப்பு அம்சங்களைத் தலைவர் எடுத்துக் கூறினர். இக்காலத்தில் கொம்மியூனிஸம் பரப்பும் கொள்கைகளினல் சைவசமயத்திற்கு வரும் அபாயத்திலிருந்து காப்பாற்றுவது சைவப் பெரியாரின் கடமையென்றும், அதற்குப் பல சைவசபைகள் ஒன்று சேர்ந்தும் தனித்தும் நடவடிக்கைகள் அவசியம் எடுக்கவேண்டுமென்பதையும் வற்புறுத்தினர்.

இலங்கையில் வெள்ளத்தினல் சேதம் ஏற்படுவதும், சைவ விரோதச் செயல்களில் சைவமக்கள் ஈடுபடுவது முதலான அநர்த்தங்கள் நடைபெறுவதும், கோவில்களிற் பூசைகள் முதலியன ஆகம விதிப்படி நடக்கத்தவறிய காரணமேயாம். ஆகையால் இச் சபை இலங்கையிலுள்ள புராதன ஆலயங்கள் ஆகம முறைப்படி நடத்துவதற்கும், சைவமக்களின் ஒழுக்கத்தைச் சீராகச் சிறக்கச் செய்வதற்கும், பலதுறைகளாலும் முயற்சி எடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்துப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு நடவடிக்கைகளும், மாவைக் குமாரசுவாமிக் குருக்கள், நவநீத கிருஷ்ண பாரதியார் ஆகிய இருவர்களும் பாடிய மாவை புராணம் முதலாய பாடல்களைச் சைவ வள்ளல்களின் உதவியுடன் அச்சுவாகனம் ஏற்றுவிக்க வேண்டுமென்ற பணியும் செய்வதற்கு இச்சபை வேண்டிய முயற்சிகள் செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. 1970-ம் வருடத் திட்டங்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்டபின் தேவார பாராயணத்துடன் கூட்டம் முடிவுற்றது.

செ. சோமசேகரம்
காரியதரிசி
அ. இ. வே. சை. சி. சபை.

# பால் பொங்கிற்று?

— பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் —

''பொங்குக பால் பொங்குகபால்
பொங்குக தைப்பொங்கல்.
புதுப்பானை தனிப்பாலும்
பொங்குகவே நன்றே''

என்று மாவைக் கவுணியன் வெண்ணெய்க் கண்ணனூர் என்னும் பண்டிதமணி க. சு. நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்கள் பல்லவி எடுத்தேத்திய தைப்பொங்கற் பண்டிகை சைவத் தமிழுலகு கொண்டாடும் பண்டிகைகளுள் மிகவும் சிறப்பு வாய்ந்தது. சிவநெறி வழங்கும் தமிழத்திருநாட்டிலே மகரசங்கிராந்தி தொடக்கம் மும்மூன்று மாதங்களுக்கொரு முறை பண்டிகைகள் தொடங்கும். அவை வருடப்பிறப்பாகிய மேட (சித்திரைச்) சங்கிராந்தி, தக்ஷிணாயனத் தொடக்கமாகிய ஆடிப பிறப்பு, ஐப்பசி மாதத்துத் தீபாவளிப் பண்டிகை, உத்தராயணத் தொடக்கமாகிய மகர (தைச) சங்கிராந்தி என்னும் நான்குமாம். இந் நான்கு பண்டிகைகளும வைதிக சமயங்களாகிய சைவம், வைணவம், சாக்தம், காணபதம, கௌமாரம், சௌரம் என்னும் ஆறினையும் பேதம் பாராட்டாது போற்றும் வேத நெறியாளர பொதுவாகப் போற்றும திருநாள்களாம்.

### சங்ககாலப் பழமை:

இத்திருநாள் தனிப்பெரும் பழமை வாய்ந்தது. இப்பெருவிழா சரித்திரச் சான்றுக் கெட்டிய வரை 1700 வருடங்களுக்கு முன்பிருநதே செம்பியன் சோழன கரிகாலன காலம் தொட்டுக் கொணடாடப்பட்டு வருவதொன்றாகும். அதுமட்டுமன்றித் தமிழரின கலாசார களஞ்சியமாகிய இரண்டாயிரம் ஆணடுப் பழமை வாய்ந்த புறநானூறு என்னும் நூலிலே 168, 182 முதலிய பாடல்களிலே உழவர்கள் பகலவனுக்குப் பொங்கல் பூசை செய்து ''பாத்துண்டு'' விருந்து கொண்டாடி மகிழ்ந்த பல பகுதிகள் ஆராய்ச்சியாளர்க்குப் பெருவிருந்தாகும்.

புதிதுண்ணல் (புதிர்)

''அருவி யார்க்குங்
கழைபயி னனந்தலைக்
கறிவள ரடுக்கத்து
மலர்ந்த காந்தட்
கொழுங்கிழங்கு மிளிரக்
கிண்டிக் கிளையொடு
கடுங்கட் கேழல்
உழுத பூமி
நன்னாள் வருபத
நோக்கிக் குறவர்
உழாஅது வித்திய
பருஉக்குரற் சிறுதினை
முந்துவிளை யாணர்
நாட்புதி துண்மார்''

புறம் 168

அதாவது மலைச்சாரலிலே மிருகங்கள் காந்தட் கிழங்குகளை அகழ்ந்தெடுத்ததன் பயனாக ''புழுதி தோன்றப் பெற்ற'' இடத்திலே விதைக்கப்பட்ட தினை விரைந்து வளர அதன் முதலிலே முற்றிய கதிர்களை அறுத்து, நல்ல நாளிலே புதிதுண்ணும் பொருட்டுப் பொங்கினர் அம்மக்கள் என்பதாம்.

### சோதிடச் சிறப்பு:

வான சாஸ்திரரீதியாகவும் இத்திருநாள் மகிமை பொருந்தியது. ஒரு வருடத்தை உத்தராயணம், தக்ஷிணாயனம் என இரண்டாகப் பகுப்பர். மனிதர்களுடைய ஒருவருடம் தேவர்களுக்கு ஒரு நாளாகும். அவற்றுள் தை மாதம் முதல் ஆனி மாதம் முடியவுள்ள ஆறு மாதங்கள் தேவர்களுக்குப் பகற்பொழுதாம். ஆடி முதல் மார்கழி வரையுள்ள ஆறு மாதங்கள் அவர்களுக்கு இராப்பொழுதாகும். எனவே மார்கழி மாதம் முழுவதும் தேவர்களுக்கு வைகறைப்பொழுதாகும். இந் நேரத்திலேயே திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை என்பன பாடி இறைவனைத் துயிலெழுப்புவது வழக்காறு. எனவே சூரியன் மகர ராசியிற் பிரவேசிக்கும் தை மாதம் முதற்றேதி உத்தராயண புண்ணியகாலம் என விசேடிக்கப்படும்.

### போகிப்பண்டிகை:

தைப்பொங்கல் தினத்துக்கு முதற்றினம் போகிப்பண்டிகை எனப்படும். இது கீழ்த்திசையின் அதிபதியாகிய இந்திரனுக்கு விழா வெடுக்கும நன்னாளாகும். அதற்கொரு புராண வரலாறுண்டு. ஒரு முறை இந்திரன செருக்குற்றுப் பெருமழை பொழிந்தான. திருமால கோவர்த்தன கிரியைக் குடையாகக் கவித்துப் பசுக்குலங்களைக் காத்தார். இந்திரன் தன் பிழையையுணர்ந்து திருமாலிடம் மன்னிப்புக் கோரினான. இந்திரன் வேணடுகோட்படி அவனை நினைவு கூரும் முகமாக பொங்கற்றினத்துக்கு முதனாள் போகிப்பணடிகை தினம் எனறழைக்கப்படும்.

### சமய அடிப்படை:

யாம் முற்கூறியவாறு அறுசமயங்களுக்குள்ளே ஒன்று ''சௌரம்'' எனப்படும். அதாவது சூரியனை முழுமுதற கடவுளாக வணங்கும் சமயம என்பதாம். இத்தகைய வணக்கம் பௌத்த நாடுகளாகிய யப்பான் போன்ற நாடுகளிலும் எம நாட்டிலும் பண்டு தொட்டேயுள்ளது. சொற் பதங் கடந்த தொல்லோனும், கண்முதற புலனாற் காட்சியுமில்லோனுமாகிய அரும்பொருளாம் ஆண்டவனை நம் முன்னோர் ''பகலவன்'' எனக் கண்கண்ட தெய்வமாக்கி வழிபாடாற்றி வந்ததில் வியப்பில்லையல்லவா?

### பகலவனின் பரியாய நாமங்கள்:

வேத சிவாகமங்களிலே பகலவனுக்குக் கூறப்படும் நாமங்கள் பல விசேட கருத்துடையவை. ஒளி கொடுப்பதனால் 'பாஸ்கரன்' எனவும், பகலை ஆக்குபவனாதலின் 'தினகரன்' எனவும், மக்கள் வழி காட்டியாதலின் 'பூஷா' எனவும் அழைக்கப்படுகிறான். உலகத்தார்க்கு நண்பனாதல் பற்றி 'மித்திரன்' எனவும, 'லோகபந்து' எனவும் பெயர் பெற்றான். வேத நெறித் தெய்வங்களுள்ளே சூரியனுக்குப் பல விசேட பண்புகள் உள. ஒழுங்கு, கட்டுப்பாடு, நியதி, செம்மை, வாய்மை என்பன அவற்றுட் சில. இதனாலேயே சங்கச் சான்றோரும்

''பால் புளிப்பினும் பகலிருளினும்
நால்வேத நெறி திரியினும்''

என்று செஞ்ஞாயிற்றின் செம்மையையும் விதந்தனர். கடமையுணர்ச்சிக்குக் காட்டாக விளங்குபவன் கதிரவனே.

### கர்ம சாட்சி:

சைவசமயானுட்டானக் கிரியைகள் யாவற்றிலும் சூரியனே சாட்சியாக வரிக்கப்படுகிறான். உதயத்தில் பிரமாவின் தன்மையையும், மத்தியானத்தில் மகேசுவரனின் அமிசத்தையும், அஸ்தமனத்தில் விஷ்ணுவின் அமிசத்தையும் உடையவனாய் விளங்குகிறான். சூரியன் தென் புலத்தார், தெய்வம், விருந்து முதலிய ஐம்புலங்களை ஓம்புங் காலத்தும் பகலவனையே தாந்தாம் செய்யும் கருமங்களுக்குச் சாட்சியாக இருக்குமாறு பிரார்த்திக்கிறார்கள். இங்ஙனமே சமயப் பிரவேசமாகிய தீக்ஷை, உபநயனம் என்பவற்றிலும் அவனே சாட்சியாகிறான். இல்லறம் என்னும் நல்லறத்திற் பிரவேசித்தற்கும், பிரமசாரிகள் விரதங்களைப் பூர்த்தி செய்தற்கும் சாட்சியாக விளங்குபவன் அக்கினி ரூபத்தில் பகலவனே. இக்காரணங்களால் அவன் 'கர்ம சாட்சி' எனவும் 'ஜகத் சட்சு' (உலகுக்குக்கண்) எனவும் அழைக்கப்படுகிறான்.

### விஞ்ஞான ரீதியில்:

இக்கால விஞ்ஞான அடிப்படையில் பகலவன் பயன்கள் அளவிடற்கரியன. புல், பூண்டு, மரம் முதலிய உயிர்த்தோற்றங்களுக்கு வேண்டிய 'பசியம்' முதலிய உணவுச் சத்துக்களைக் கொடுப்பவன் சூரியனே என்பது தாவரவியலார் கூற்று. எனவே தாவர சங்கமப் பொருள்கள் யாவற்றுக்கும் கதிரவன் இன்றியமையாதவன்.

### நன்றிக் கடன்

இத்துணை மகிமை வாய்ந்த செஞ்ஞாயிற்றுக்கு உழவர் முதல் யாவரும் நன்றிக்கடன் கழிப்பது சாலவும் பொருத்தமானதே. ஆதலின் பொங்கற்றிருநாளன்று யாவரும் தம்மில்லங்களைச் சுத்தி செய்து, கோலமிட்டு, புதுப்பானை, பால், செந்நெல், இஞ்சி, மஞ்சள், கரும்பு என்பன கொண்டு சூரியபகவானுக்குப் பொங்கி, படைத்து, பூசித்து, ''பாத்துண்டு'' பொங்கற் பண்டிகையைக் கொண்டாடுவதே நன்றிமறவாத் தமிழ் மக்கள் பண்பாம்.

### பட்டிப் பொங்கல்

மறுநாளாகிய பட்டிப்பொங்கலன்று சொல்லும் பொருளும் போலச் செல்வமாக விளங்கும் மாடுகளை நீராட்டி, தொழுவங்களைச் சுத்திசெய்து, அவற்றின் இல்லங்களிற் பொங்கல் செய்து, பசுக்களை விபூதி, சந்தனம், குங்குமம் என்பவற்றால் அலங்கரித்து, தூபதீபங்காட்டி, உணவு அருந்தி மகிழ்வதே சைவர்தம் வாழ்க்கைப் பேறும். சுபம்.

''வாழ்க அந்தணர் வானவர்
ஆனினம்.''

# மலர் வழிபாடு!!

ஆசிரியர் திலகம் ஆ. கணபதிப்பிள்ளை

— முற்றொடர் —

மலர் இட்டு வழிபடுவது பற்றிய முன் கட்டுரையில் அதன் பிரயோசனத்தையும் அது பற்றி நமது சைவநாற்குரவர் பாடல்களிலிருந்து மேற்கோள்களையும் தந்தோம். அத்தொடரில் இன்னும் அறிந்து கொள்ள வேண்டுபவை இக் கட்டுரையில் தரப்படுகின்றன.

நாவலர் பெருமான் இரண்டாம் சைவவினாவிடையில் சிவாலய கைங்கரிய இயலில் திருநந்தவனம் வைத்தல், பத்திர புஷ்பமெடுத்தல் பற்றிக் கூறியவை இன்றியமையாத குறிப்புகள் என்பதை மலர் வழிபாடு செய்வார் மறந்து விடக்கூடாது. பூரண பலன்பெற அதுவே வழி.

புஷ்ப விதி பற்றிய நூலிற் காணப்பட்ட கீழ்க்காணும் கருத்துக்களும் பிறவும் நாம் இன்னும் அறிந்து கோடற்குரியவை அவை:-

காலை வழிபாட்டுக் குரியவை. அலரி, நாயுருவி, மல்லிகை, எருக்கு, வில்வம், வெண்மலர் அடுக்கு நந்தியாவர்த்தம், தாமரை.

உச்சிக்கால வழிபாட்டுக்குரியவை:- பொன்னூமத்தை, புலிநகக் கொன்றை, வெள்ளைப்பாதிரி, வன்னி, செய்யவழுதுணை, மந்தாரை, வெள்ளைக் காக் கொன்றை, பெரியதும்பை.

அந்திப்போது வழிபாட்டுக்கு உரியவை:- யாமத்துக்கும்.

மல்லிகை, சண்பகப்பூ, கொழுந்து.

எல்லாக் காலமும்:- புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், வலம்புரி, நீலம் பாதிரி, அலரி, செந்தாமரை.

மாதபுஷ்பம்:- சித்திரை பலாசு; வைகாசி புன்னை; ஆனி வெள்ளெருக்கு; ஆடி அலரி; ஆவணி சண்பகம்; புரட்டாதி கொன்றை; ஐப்பசி தும்பை; கார்த்திகை செய்யகத்தரி; மார்கழி பட்டி; தை தாமரை; மாசி காவி; பங்குனி மல்லிகை.

தெய்வப் பிரீதியானவை:-
சங்கரன் - வில்வம், கொன்றை.
விநாயகர் - வெட்சி.
முருகன் - கடம்பு.
அல்லி, கருங்குவளை - சகலதெய்வங்கட்கும்.
மாயவன் - குல்லை.
மலைமகள் - நீலம்.
சூரியன் - கோகனதம்.
திருமகள் - நெய்தல்.
கலைமகள் - வெண்கமலம்,
நிர்மாலியமான வில்வ, துளசிப் பத்திரங்கள் கழுவிக் கழுவி முறையே ஆறு மாதம் ஒரு வருடம் சாத்தலாம்.

அட்ட புஷ்பம், புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை;

'' அட்ட மாமலர் சூடும் வாட்
போக்கியோர்க்கு
இட்டமாகி இணையடி
யேத்துமே.''

— அப்பர்;

# தனுர் மாசம் (மார்கழி மீ) உஷக்கால பூசையும் தைப்பொங்கற் பண்டிகையும்

— பிரம்மஸ்ரீ ஏ. ப. சர்வேஸ்வரக் குருக்கள், மாத்தனு, கொக்குவில் —

சிவபெருமானுக்குச் செய்யப்படும் பூஜைகள் நித்தியம், நைமித்தியம், காமியம் என மூவகைப்படும். அவற்றுள் நைமித்தியமாகிய தனுர் மாச உஷக்காலப் பூஜை மிகச் சிறந்ததாகும். தேவர்கட்கு ஒருநாள் நமக்கு ஒரு வருஷம் என வழங்கப்படும்.

சிவபெருமானை அர்ச்சித்து வழிபடலுக்குரிய முக்கிய காலங்கள்— உஷக்காலம், பிராதக்காலம், உச்சிக்காலம், சாயங்காலம், அர்த்தயாமம் என ஐந்துமாம்.

மார்கழி மாசத்தில் — உஷக்காலத்திலும்
தை மாசத்தில் — பிராதக்காலத்திலும்
சித்திரை மாசத்தில் — உச்சிக்காலத்திலும்
ஆடி மாசத்தில் — சாயங்காலத்திலும்
ஐப்பசி மாசத்தில் — அர்த்தயாமத்திலும்

அந்தந்த மாதம் 30 நாட்களிலும் சிவனை விசேடமாக பூசை வழிபடல் அதிமுக்கியம் என ஆகமங்கள் கூறுகின்றன.

பகல் காலம் உத்தராயணமெனவும், இராக்காலம் தக்ஷிணாயனமெனவும் கூறுவர். சூரியன் வடக்குத் திக்கில் ஒதுங்குவது உத்தராயனம், இது தேவர்கட்கு பகல் காலம்.

சூரியன் தக்ஷிண திக்காகிய தெற்குப் பக்கம் ஒதுங்குவது தக்ஷிணாயனம். இது தேவர்கட்கு இராக்காலம் எனப்படும். ஆகவே, இராத்திரிக் காலத்திற்கு முடிவாகிய மார்கழி மாசத்தில் சூரியோதயத்திற்கு முன் விடியற்காலத்தில் மானுடராகிய நாம் எல்லோரும் காத்திருந்து ''தேவதாப்ரார்த்தனை'' உதவியால் சகல காரியமும் இடையூறின்றி முடிவெய்தப் பிரார்த்தித்து வருகிறோம். நம் முன்னோர் மார்கழி மாத பூர்வ பக்கத்திருவாதிரை நக்ஷத்திரத்திற்கு முன் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை ஓதி திருவாதிரை நக்ஷத்திரத்தன்று சிவனை மிகவும் சிரத்தையோடு வழிபட்டனர்.

வேதம், ஸங்கீதம், யோகாப்பியாசம் முதலிய பல கலைகளையும் விடியற் காலத்திலே அப்பியாசம் செய்கின்றனர்.

ஸத்வ காலமாகிய விடியற் காலத்தில் ஸத்வ க்ஷேத்திரமாகிய சிவாலயத்தில் ஸத்வப் பொருளாகிய இறைவனை ஸத்வ குணத்தில் தோய்ந்த மனத்தால், ஸத்வ திரவியம், ஸத்வ புஷ்பம் முதலியவற்றால் ஸத்வ பூஜை செய்தால் உத்தமமான பலனை அடையலாம்.

அன்பர்களே! பெறுதற்கரிய இப்பிறவியைப் போக்காது சைவ மக்களாகிய நாம் விடியற்காலம் (4) நாலு மணிக்கு எழுந்து நித்தியகடன் முடித்து ஸ்நானம் பண்ணி விபூதி ருத்திராக்கம் தரித்து விதிப்படி பஞ்சாக்ஷர ஜபம் செய்து சிவாலய தரிசனம் செய்ய வேண்டும்.

தனுர் ராசியிலிருந்து மகர ராசிக்குச் சூரியன் பிரவேசிக்கும் காலந்தான் தைச்சங்கராந்தியென்றும மகரசங்கிராந்தியென்றும் தைப்பொங்கற் பண்டிகையென்றுங் கூறுவர்.

சூரியன் உலகத்தில் பிரத்தியக்ஷக் கடவுள். அவரைத் தந்தையென்றும், சந்திரனைத் தாய் என்றும் நம்முன்னோர் கூறுவர்.

வேதம் இவ்விரண்டையும் அங்கீகரித்துள்ளது. ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள ஜீவராசிகள் அசையாது நின்று உயிர் வாழும் மரம், செடி, கொடிகளுங் கூட சூரியனைக் கொண்டே உயிர் வாழ்கின்றன.

சூரியன் கிரகங்களில் ஒன்று. நவ (9) கோள்களில் நடுநாயகமாய் விளங்குவது. மற்றக்கிரகங்களையும் கிரகித்து ஆகர்ஷித்து இயக்குவிக்கும் பெருமை வாய்ந்தது. அதனால் சூரியனை சூரியக் கிரகம் என்றும் அழைக்கின்றனர் முக்காலமும் உணர்ந்த பெரியோர்.

சூரிய பகவான் காசியப்ப முனிவருக்கும் அதிதி தேவிக்கும் புத்திரனாகப் பிறந்தார். துவஷ்டாவின் புதல்வியாகிய சஞ்ஞா தேவியை மணந்தார். அவள்பால் வைவசுவதன், யமன் என்னும் இரண்டு ஆண் மகவும்; யமுனை என்னும் பெண் மகவும் பெற்றார்கள் என்று நூல்கள் கூறுகின்றன.

உதயகால சூரியனை = படைப்புக் கடவுளாகிய பிரம்மசொரூபம் என்றும்; மத்தியான கால சூரியனை = சங்காரகர்த்தாவாகிய சிவசொரூபம் என்றும், அஸ்தமன கால சூரியனை பரிபாலனகர்த்தாவாகிய விஷ்ணுசொரூபமென்றும் முக்காலம் உணர்ந்த முனிவர்கள் வணங்கி வருகின்றனர்.

நாம் காண்கின்ற இந்த அண்டம் சூரியனை ஆதாரமாகக்கொண்டது. வியாசர் இவரைப் பற்றிக் கூறியிருக்கிறார்.

பன்னிருவடிவம் கொள்ளும் சூரிய பகவான் ஆகாய வீதியிலே தமது உக்கிரமான கிரணங்களை வேகமாகப் பரவவிட்டுச் சஞ்சரிக்கின்றார். ஆனால், அவரது கிரண வேகம் முழுதும் பூமியிற் படுமானால். இப்பூவுலக மாந்தராகிய நாமெல்லோரும் உயிர் வாழமுடியாது.

இதனை மனத்திற் கருதி அவ்வெப்பத்தைப் பூமியின் மீது படாதவாறு பெருங்கருணையோடு தாங்களே கிரகித்து உயிர்கள் தாங்கத்தக்க ஒளியையும் வெப்பத்தையும் தந்து உதவிபுரியும் தெய்வீக முனிவர்கள் சூரிய மண்டலத்தில் இருக்கின்றனர் என்பது ஐதீகம். அம் முனிவருக்கு இடையூறு வராதிருக்க முருகப்பெருமான் தமது திருக்கரத்தையுயர்த்தி அம் மகான்களைக் காத்து வருகிறார் என்று திருமுருகாற்றுப்படையில் கூறுகின்றது.

''விண்செலன் மரபின் ஐயர்க் கேந்தியது ஒருகை''

இப்பூவுலகில் வாழும் ஆஸ்திகச் செல்வர்கள் ஒவ்வொருவருக்கும் பலவிதப் பண்டிகைகளிற் சிறந்தது இப்பொங்கல் பண்டிகை ஒன்றே.

தேவர்கட்கு சூரியோதயமாயும் நமக்கு சுபகர்மங்களைச் செய்வதற்குரிய உத்தராயணத்தின் ஆரம்ப புண்யகாலமாயும் உள்ள இத்தினத்தை பொங்கற் பண்டிகை என்கிறோம். பொங்கற் தினம் சூரியோதயத்திற்கு முன்னரே இல்லத்தையும் முற்றத்தையும் பெருக்கி மெழுகிக் கோலமிட்டு புறத்தூய்மை அகத்தூய்மையுடையராய் மாவிலை மஞ்சலிலை, சந்தணம், குங்குமம், புஷ்பம் முதலியவற்றால் பொங்கற் பாண்டத்தை அலங்கரித்துப் பால் வார்த்து முற்றத்திலே பொங்கலிடுவர். பால் பொங்கி எந்தத் திசை நோக்கி வழிந்தோடுகிறது என்று பார்த்து நன்மை தீமையறிவர் உழவர்.

இந்துக்கள் பாற்பொங்கலை மிகவும் பக்தி சிரத்தையோடு பொங்குவர். பொங்கிய பின் சூரிய பகவானுக்குப் பிரீதியாகத் தலைவாழையிலையில் பொங்கிய அமுதைப் படைத்துக் கனிவர்க்கங்களையும் கரும்பையும் நிவேதித்து வணங்குவர். இதனால் உலக மக்கள் சுபிக்ஷமடையக் கருணை கூருவார் என்பது உண்மை.

புதிதாய் விளைந்து அறுத்த நெல் முதலிய தானியங்களைத் தேவர்கட்கு முதல் முதல் அமுது செய்து ஆராதித்து வணங்கிப் பின் மக்கள் உண்ண வேண்டும் என்று தமது கீதையில் ஸ்ரீ பகவானே அருளிச் செய்துள்ளார்.

அவ்வாண்டில் விளைந்த நெல்லினை (அரிசியை) இட்டு சூரியனை நினைத்துப் பொங்கிப் போற்றி நைவேதிப்பதினால் இதனைப் பொங்கற் பண்டிகை என வழங்கலாயினர்.

பொங்கலிடும் சமயத்தில் முதலில் பொங்கிவரும் கொதிநீரை விவசாயிகள் எடுத்து வேப்பிலை அல்லது மாவிலைகளால் பொங்கலோ — பொங்கல் என்று கூறித் தெளிப்பார்கள். இங்ஙனம் விவசாயிகள் செய்வதில் நற்பலன் கிட்டும் என்பது நம்பிக்கை.

தக்ஷிணாயனத்தில் ஏற்படும் பீடைகள் நீங்கும் பொருட்டு மேகாதிபதியாகிய இந்திரனைக் குறித்துப் பொங்கலிட்டு பூஜிப்பர்.

இது தைப்பொங்கலின் முதல் நாள் செய்வது. இதை போகிப் பண்டிகையென்பர். நாடு செழிப்படையவும், போக போக்கியங்களுக்கு எல்லாம் அதிதேவதை இந்திரனேயாகையால் இப்பண்டிகைக்குப் போகிப்பண்டிகை என்று பெயர். அடுத்தநாள் பொங்கல், மறுநாள் மாட்டுப் பொங்கல் பண்டிகையென்பர்.

வேளாண்மையே வையகத்தின் ஜீவன். ஆகையால் அது பசுக்களாலே சிறப்படைய வேண்டியிருப்பதால், மக்களின் ஒரு பகுதியான தேவதைகளைப் பூர்த்தி செய்யும் பால, தயிர், வெண்ணெய், நெய், கோசலம், கோமயம் என்னும் பஞ்சகந்தியங்களுக்கு பசுக்களே முக்கியம். அதனால் பசுக்களைக் குறித்துப் பொங்கலிடுவர்.

அன்று பசுக்களைக் குளிக்க வார்த்து வஸ்திரம், சந்தணம், குங்குமம், மஞ்சள், புஷ்பம் என்பனவற்றால் அலங்கரித்துப் பொங்கலிடுவர், பசு நாயகனாகிய ஸ்ரீ கோபாலனைக் குறித்துப் பொங்கல் பூஜைசெய்து வழிபட்டு முன் கூறியபடி கொதிநீரைத் தெளித்து வழிபடுவர். இதனால் மாடு, கன்று பெருகி வாழும் என்பது ஐதீகம் பொங்கல் அமுது பழவர்க்கங்களை அவைகளுக்கு உண்ணக் கொடுத்து வணங்குவார்கள். இத் தினத்தில் காளைகளுக்கு ஓய்வு கொடுப்பர். இப்பொங்கலை சிலர் பட்டிப் பொங்கல் என்பர். பசுக்களைக் குறித்துச் செய்யப்படும் பொங்கல் பூஜைகளால் ஸ்ரீ வேணுகான கோகுலகிருஷ்ண பகவானுக்குப் பிரீதியுண்டுபண்ணும். வியாசர் பெருமான் சூரிய பகவானைக் குறித்து துதி கூறியுள்ளார்கள். அவர்துதியை உலக மக்களாகிய நாமும் துதித்து வணங்கி வையகமெல்லாம் வாழ மனமுவந்து வேண்டுவோமாக.

திவாகரம் தீப்த ஸஹஸ்ர
ரஸ்மிம்
தேஜோமயம் ஜகதஹ் கர்ம
ஸாக்ஷிம்
ஹம்சம் பானும் சூர்ய மாதிம்
க்ரஹாணும்
ரவிம் ஸ்தா ஹம் சரண
மஹம்ப் பத்யே!!

## சித்தாந்தச் செந்நெறி

பண்டிதர் மு. கந்தையா, ஏழாலை

— முற்றொடர் —

விசிட்டாத் வைதம் ஒப்புக் கொள்ளும் முப்பொருள்களில் 'சித்' 'அசித்' என்னும் இரண்டும் ஈஸ்வரனால் செயற்படுத்தப் படுவனவாய் ஈஸ்வரனுக்கு நிலையமாய் ஈஸ்வரனுக்குச் சேடமாய் உள்ளவையாம். இத்தன்மைபற்றி இவற்றின் தொடர்பு உடலுயிர்த் தொடர்பை உதாரணமாகக் கொண்டு விளக்கப்படுகின்றது. குறித்த முப்பொருள்களில் 'சித்' 'அசித்' என்னுமிரண்டும் உடலாகவும ஈஸ்வரன் உயிராகவும் நோக்கிக் கொள்ளற்பாலன. உயிரினாலே அதிட்டிக்கப்படுவதும், தாங்கப்படுவதும், தன் நோக்கத்திற்கேற்ப உபயோகப்படுத்தப் படுவதும் உடலின் பண்பு. அங்ஙனமே, ஈஸ்வரனால் அதிட்டிக்கப் படுதலும், தாங்கப்படுதலும், தன் நோக்கத்திற்கேற்ப உபயோகப் படுத்தப்படுவதும் 'சித்' 'அசித்' என்பவற்றுக்கான பண்புகளாம். அன்றியும் ''சித்'' ''அசித்'' என்னும் இரண்டும் முற்றமுடிய ஈஸ்வரனுக்காகவே நிலைபெறுகின்றன என்னும் உண்மையையும் இவ்வுதாரண முகத்தாற் புலப் படுத்தப்படும்.

இனி, குறித்த அம் முப்பொருள்களுள் ஈஸ்வரன் எல்லாவற்றையும் அதிட்டித்து மேல் நிற்ப, 'சித்' 'அசித்' என்னும் இரண்டும் அதற்கடங்கி நிற்பனவாகக் கொள்ளப்படும்.

(தொடரும்)

# மேலான முருகன் தலங்கள் இரண்டு விளங்கும் யாழ்ப்பாணம்

ஆங்கிலேய பத்திரிகை ஒன்றில் காங்கேசன்துறையைக் குரக்கன் துறை என்றும், பரிதித்துறையைப் பருத்தித்துறை என்றும் காங்கேசன்துறை வாசி ஒருவர் எழுதியுள்ளார். இவர் தக்க ஆராய்ச்சியின்றியே இப்படி எழுதியுள்ளார்போலும். இப்பேர்ப்பட்ட விபரீதச் செய்கைகள் சமய நிந்தனையெனக் கருதப்பட வேண்டியவை. முருகக் கடவுளாகும் காங்கேசன் விக்கிரகத்தைப் பரதகண்டத்திலிருந்து கப்பலிற் கொண்டு வந்து சோழராஜன் மகள் மாருதப்புரவல்லி இறக்கின துறைமுகம் காங்கேசன்துறை என மாருதப்புரவல்லி காலந் தொடக்கம் அழைக்கப்படுகின்றது. மாருதப்புரவல்லியின் குதிரைமுக நோய் கதிர்காம முருகன் அசரீரி வாக்கின்படி நகுலேஸ்வரத்தில் கங்கா சாகர சங்கம தீர்த்தம் ஆடத் தீர்ந்தமையால் முருகனுக்கன்பு மிகுந்து அவன் வீற்றிருக்கக் கட்டின கோயிலே மாவிட்டபுர தேவஸ்தானம். மாருதப்புரவல்லி கதிர்காமஞ் சென்று பூசித்தது சரித்திர உண்மை.

குரக்கன் ஏற்றுமதி செய்த துறை என்று கூறுவது பெரும் பிழையாகும். யாழ்ப்பாணத்தில் ஏற்றுமதி செய்ய வசதியான துறைமுகம் ஊர்காவற்றுறை ஒன்றுதான். இதைப் பழைய சரித்திரம் கூறும். குரக்கன் வடமாகாணத்தில் ஏராளமாய் உண்டு. இருந்தும், முற்காலத்திற்கூட ஏற்றுமதிக்குப் போதியளவு இருக்கவில்லை. வாடைக் காற்றுக் காலத்தில் இறக்குமதி ஏற்றுமதி காங்கேசன் துறையிலாவது பரிதித்துறையிலாவது செய்ய முடியாது. சோழகக் காற்றுக் காலத்தில் பரிதித்துறையிலாவது செய்ய முடியாது. சோழகக் காற்றுக் காலத்தில் ஊர்காவற்றுறையில்தான் ஏற்றுமதி வசதியாய்ச் செய்து தென் பரத கண்ட துறைமுகங்களுக்குக் காற்றுதவியுடன் கப்பல் கெதியாய் ஓட முடியும். பறங்கிப்பேட்டைதான் முற்காலத்தில் பெயர்பெற்ற துறைமுகம். பறங்கிப் பேட்டைக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில்தான் படகுகள் ஓடின. இதற்குச் சான்றுகள் மிக உள. பழைய வார்நாமச் சான்றுகள் இன்றும் இருக்கின்றன.

பரிதித்துறை எனும் நாமம் சூரியன் பூசித்த உபய கதிர்காமம் என்ற கருத்துச் சம்பந்தமாகத் தோன்றின நாமம் ஆகும். உபய கதிர்காமம் என்று ஒரு முருகன் தலம் விஷ்ணுவின் வல்லிபுரக் கோயில் அருகில் உள்ளது. இது பெரும் தெய்வீகம் பொருந்தின முருகன்கோயில். சைவ மக்களுக்கு இன்னும் இதன் பெருமை விளங்கவில்லை. நிகரிலாக் கதிர்காமத்திற்கு இரண்டாவது தலமாகும் இந்த முருகன் உபய கதிர்காமம். தென் பரதகண்டம் திருநெல்வேலியில் இருந்து ஓர் சிவபக்தராகும் பிராமணப் பெண்ணுக்கு முருகன் உத்தரவு கனவில் தோன்றியளிக்க அப்பெண் உபய கதிர்காமம் வந்து பூசித்துப் பணிசெய்து அருட் செல்வம் பெற்ற தலமாகும், இந்த உபய கதிர்காமம். தெட்சண கைலாய மான்மியம் இதன் மேலான தெய்வீகத்தினைக் கூறும். சைவ சமயம் வளர்க்கும் சைவத் தமிழ் மக்கள் இந்தத் தலத்தின் மகிமைதனை இன்னும் நன்றாயுணர்கின்றாரில்லை. முன் ஆறுமுகநாவலருக்கு இருந்த சைவாபிமானம் சைவமக்களுக்கு இன்றில்லாததுதான் இதற்குக் காரணம்: இங்கு ஆனைமுகம் போன்று பிரணவம் முளைத்திருக்கின்றது. கதிர் என விளங்கும் சூரியன் பூசித்தமையால் கதிர்காமம் எனும் நாமம் இந்தத் தெற்கு முருகன் தலத்திற்குத் தோன்றினது. இது மாணிக்ககங்கைக் கரையில் உள்ளது. கதிர்காமம், முருகன் சூக்குமதலம். வடக்கே முருகன் ஸ்தூல தலமாய் விளங்கும் உபய கதிர்காமத்தில் சூரியன் பூசித்தமையால் பரிதித்துறையென வந்தது. கடற்கரைக்கு அருகில் இருப்பதால் இங்கு துறைமுகம் தோன்றி துறை எனும் நாமம் விளங்க நேரிட்டது. பரிதித்துறையிலிருந்து தோணிகள் சரக்கேற்றி இலங்கையில் உள்ள வேறு துறைமுகங்களுக்கு ஓடுவது இன்றும் வழக்கமாய் இருக்கின்றது. பருத்தி ஏற்றுமதி இந்தத் துறைமுகத்தில் நடந்தது என்றுகூறுவது சரியன்று. முற்காலத்தில் பருத்தி தீவுப்பகுதிகளிலும் வேறு சில கிராமங்களிலும் நன்றாய் வளர்ந்திருந்தது. இது யாழ்ப்பாணத்தில் நெசவுத் தொழில் செய்வோர்க்கு முற்காலத்தில் உபயோகப்பட்டது. இவர்கள் பருத்தி நெசவுக்கே காணாது இருந்தது. இப்படியாதலின் ஏற்றுமதி முன் நடக்கவில்லை. ஏற்றுமதி நடந்திருப்பின் அது ஊர்காவற்றுறையில்தான் நடந்திருக்கும். இலங்கை சம்பந்தமான சரித்திர விஷயங்கள் ஒரு சரித்திர நூலிலும் சரியாக எழுதப்படவில்லை. பிழைகள் அதிகமாய் இருக்கின்றன. பௌத்த சிங்கள சரித்திர ஆராய்ச்சியாளர்கள் இலங்கைச் சரித்திரத்தில் தாம் விரும்பியபடி பொய்களை எழுதுவது சுயநலம் கருதியன்றோ. சரித்திர மன்னன் குணசேகரம் ஒருவரே இலங்கைச் சரித்திர விஷயங்களைச் சரியாய் எழுதினர். இலங்கைச் சரித்திர விஷயங்கள் மேலான தமிழ் நூல்களிற்றான் எழுதப்பட்டிருக்கின்றன. இதைத் தமிழ் மக்கள் ஆராய்ந்து அறிவது அவசியம். தமிழன் தன்னை யாரென்று அறிந்து தனது பெருமையை நிலைநாட்ட முயலவேண்டும்.

சைவன்

---

## முப்பொருள் விளக்கம்

(H. S. C. வகுப்பிற்குரியது)

அச்சுவேலி

**சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள்**

அவர்களால் ஆக்கப்பெற்றது.

சமயபாடத்துக்காக
வித்தியாகர்த்தரால்
அங்கீகரிக்கப்பெற்றது.

**விலை ரூபா 3-00**

எல்லாப் புத்தகசாலைகளிலும்
பெற்றுக் கொள்ளலாம்.

மொத்த வியாபாரிகளுக்கு
விற்பனைக் கழிவுண்டு.

---

## சந்தா நேயர்களுக்கு அறிவித்தல்

வருடச் சந்தா ரூபா 5/-ஐயும்
பின்வரும் விலாசத்திற்கு
அனுப்பி வைக்கவும்.

த. சிவலிங்கம்
தலைவர்
அ. இ. சை. அ. பா. சபை
'விமலஸ்தான்' சுன்னுகம்.

---

# முத்திக்குவழி

சி. நாகலிங்கம், தெல்லிப்பழை

— முற்றொடர் —

குருமூலமாகச் சைவசமயப் பிரவேசஞ் செய்யப்பட்டவர், ஸ்நானசந்தியாவந்தனஞ் செய்வதினுல்தான் சரியை முதலிய வழிபாட்டினுல் பயன்பெறுவர்.

சரியையாவது:- சிவபெருமானுக்கருகமாகிய பத்திர புட்பங்களையுடைய விருக்ஷங்களை சண்டாளபூமி, சுடுகாடு, மலசலபூமிக் கணிமைக்கணில்லாததாய், நான்கெல்லையும் சுவரினுலேனும், வேலியினுலேனும் சூழப்பட்டதாய், கீழே ஆழமாக வெட்டி, எலும்பு முதலிய குற்றங்களறப் பரிசோதிக்கப்பட்டதாய், பசுநிரை கட்டப்பெற்றுக் கோசலகோமயங்களினுலே சுத்தி செய்யப்பட்டதாயுள்ள நிலத்திலே விருக்ஷங்களை வைத்து, புலாலுண்ணல் முதலிய குற்றங்களையுடைய புலையர், சைவ சமயப்பிரவேசஞ் செய்யாத புறச்சமயிகள், தூரஸ்திரீகள் முதலாயினோர் உள்ளே பிரவேசியாமலும், எச்சில், மூக்குநீர், மலசலமுதலியவற்றால் அசுசிப்படுத்தாமலும் அங்ஙனமுள்ள பத்திரபுட்பங்களைக் கடவுட்பூசை முதலியவற்றிற்கன்றிப் பிறவற்றிற்கு உபயோகப்படுத்தாமலும், அவைகளிற் சலந்தெறிக்கும்படி வஸ்திரந்தோயாமலும், வஸ்திரத்தைப் போடாமலும், பாதுகாத்து, நீர்விடுகை முதலியவற்றாற் குறைவுறாது வளர்த்தவர் நிலப்பூவைத் தரும் அலரி, நந்தியாவர்த்தம், வெள்ளெருக்கு, பட்டி, நாயுருவி, பொன்னூமத்தை, செவ்வந்தி, வெட்டிவேர், இலாமிச்சை, துளசி, தருப்பை, மருக்கொழுந்து, சிவகரந்தை, விட்டுணுகாந்தி, மாசிப்பச்சை, திருநீற்றுப்பச்சை, பூளை, அறுகு முதலிய செடிகளையும், கோட்டுப்பூவையும் பத்திரங்களையுந் தரும் வில்வம், பாதிரி, கோங்கு, பன்னி, கொன்றை, சண்பகம், மகிழ், புன்னை, வெட்சி, கடம்பு, ஆத்தி, செருந்தி முதலிய மரங்களையும், கொடிப்பூவைத் தரும் மல்லிகை, முல்லை, இருவாட்சி, பிச்சி, வெண்காக்கொன்றை, கருங்காக்கொன்றை, கருமுகை, தாளி, வெற்றிலை, முதலிய கொடிகளையும், செந்தாமரை, வெண்டாமரை, செங்கழுநீர், நீலோற்பலம், செவ்வாம்பல், வெள்ளாம்பல் முதலிய நீர்ப்பூக்களையும், விதிப்படி வைத்து வளர்த்தலாம்.

**விதிப்படி பத்திரபுட்பங் கொய்தல்:-**

நான்கு வருணத்துட்பட்டவராய், சிவதீட்சை பெற்றவராய், நியமாசாரமுடையவராயு மிருப்பவர், சூரியோதயத்துக்கு முன்னே ஸ்நானஞ் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்துச் சந்தியாவந்தனம் முடித்து, இரண்டு கைகளையுங் கழுவித் திருப்பூங்கூடையை எடுத்து, ஒரு தண்டு நுனியிலே மாட்டி, உயரப்பிடித்துக் கொண்டேனும், திருநந்தவனத்திற்போய், சிவபெருமானை மறவாத சிந்தையோடு, அன்றலர்ந்த புட்பங்களைத் தேன்துளி பொருந்தியிருக்கின்ற பச்சைக் காம்புடனும், பத்திரங்களையும் எடுத்துக் கழுவாமல் அவைகளைப் பத்திரத்தால் மூடிக்கொண்டு, திருப்பூங்கூடையைத் தூக்கி விடுதலாம். பத்திரபுட்பங்களை எடுக்கும்பொழுது மனம் பிறிதுபடல் மிகவுங் குற்றம்.

**விதிப்படி திருமாலை கட்டுதல்:-**

திருமாலைக்குறட்டை இடம்பண்ணித் திருப்பூங்கூடையிலுள்ள பத்திரபுட்பங்களையெடுத்து, கழுவப்பட்ட சுத்தமான பாத்திரத்தில் வைத்துக்கொண்டு, மௌனியாயிருந்து சாவதானமாக ஆராய்ந்து, புழுக்கடி முதலிய பழுதுள்ளவைகளையகற்றி விட்டு, இண்டை, தொடை, கண்ணி, பந்து, தண்டு, பிணையல் முதலிய பலவகைத் திருமாலைகளைக் கட்டுதலாம். திருமாலை கட்டும்பொழுது, செய்யக்கூடாத குற்றங்கள்:- பேசுதல், சிரித்தல், சிவபெருமானுடைய திருவடிகளினன்றிப் பிறவற்றிற் சிந்தை வைத்தல், கைகளால் உடம்பையேனும் வஸ்திரத்தையேனுந் தீண்டுதல் முதலியன.

**விதிப்படி தோத்திரம் ஓதுதலாவது :-**

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் பெரிய புராணமென்னும் அருட்பாக்களை மனங்கசிந்துருகக் கண்ணீர்வார உரோமஞ் சிலிர்ப்பப் பண்ணோடு பாடுதலாம்.

**விதிப்படி திருவலகிடுதலாவது:-**

சூரியோதயத்துக்கு முன் ஸ்நானஞ் செய்து சந்தியாவந்தனம் முடித்துக்கொண்டு சிவாலயத்தினுட் புகுந்து மிருதுவாகிய துடைப்பத்தாற் கிருமிகீடங்கள் சாவாமல் மேற்பட அலகிட்டுக் குப்பையை வாரிக்கொண்டு போய்க்குழியிலிடுதலாம்.

**விதிப்படி மெழுக்குச் சாத்தலாவது:-**

ஈன்றணிமையதும் நோயற்றதும் ஆகிய பசுவின் சாணத்தைப் பூமியில் விழுமுன் இலையிலேந்தியாயினும், அது கூடாதவழிச் சுத்த நிலத்து வீழ்ந்த சாணத்தை மேல் கீழ் தள்ளி நடுப்படவெடுத்தாயினும், வாவி நதி கிணறு முதலியவற்றில் வடித்து எடுத்துவந்த சலத்துடன் கூட்டிச் செங்கற் படுத்த நிலத்தையும், சுண்ணம்பு படுத்த நிலத்தையும் மண்படுத்த நிலத்தையும் மெழுகுதலாம், கற்படுத்தப்பட்ட நிலத்தையும், கருஞ்சுண்ணம்படுத்தப்பட்ட நிலத்தையும் கழுவவேண்டும்.

**விதிப்படி தீபமேற்றுதலாவது :-**

தாமரைநூல், வெள்ளெருக்கு நூல், பருத்திநூல் என்பவற்றுள், இருபத்தோரிழையாலேனும், பதினன்கிழையாலேனும், ஏழிழையாலேனும், கர்ப்பூரப்பொடி கூட்டித் திரிபண்ணி அழுக்கின்றி விளங்கும் அகலிலிட்டு, உத்தமோத்தமமாகிய கபிலைநெய் முதலியவற்றை அவ்வகலுக்குள் வார்த்துச் சுடர் கொளுவிப் பிரகாசிக்கச் செய்தலாம்.

(தொடரும்)

# ஆத்திசூடி

— ஒளிச்சுடர் —

''ஆத்திசூடி யமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோம்
யாமே''

திருவாத்திப் பூமாலை தரித்த சிவபெருமானால் விரும்பப்பட்ட விநாயகப்பெருமானைத் தோத்திரம் செய்து வணங்குவோம்.

ஒழுக்க நூல்கள் மனித சமுதாயம் பண்பாட்டிலும், நாகரீகத்திலும் பெருவளர்ச்சியடைவதற்கு உதவுவன. அவை, மக்கள் வாழ்வாங்கு வாழவேண்டிய அறநெறிகளை அறிவுறுத்துவன. ''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்பது வள்ளுவர் வாக்கு. தமிழ் மக்கள் உலகம் போற்றும் சான்றோராய் விளங்குவதற்குக் காரணம் தமிழ் மொழியில் உள்ள ஒழுக்க நூல்களும் ஒழுக்கங்களை வலியுறுத்தும் புராண இதிகாசங்களுமாகும்.

ஒழுக்கமும் தெய்வபக்தியும் இளமையிலேயே கல்வியுடன் ஊட்டப்படல் வேண்டும். இளமையில் ஒருவனுக்கு மனத்தில் பதியும் சிந்தனையும் பழக்க வழக்கங்களுமே அவனது வாழ்க்கை முழுதும் பரந்து நிற்கும். இதனாலே ''தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்'' என்னும் பழமொழி வழக்கத்தில் உள்ளது. மேலும், ''இளமையிற் கல்வி சிலையிலெழுத்து'' என்னும் மூதுரையையும் நாம் சிந்திக்க வேண்டும்.

தமிழ் மொழியிலே அளவற்ற ஒழுக்க நூல்கள் உளவாயினும் ஔவையாரால் ஆக்கப்பட்ட ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய இரு நூல்கள் இளஞ்சிறார் கற்க வேண்டிய மிகச் சிறந்த நீதி நூல்களாகும். இப்போதைய பாடத் திட்டங்களில் இவை அங்கொன்றும், இங்கொன்றுமாக இடம்பெறுகின்றனவேயல்லாமல், இவற்றை முற்றாகக் கற்க வசதி செய்யப்படவில்லை.

ஒவ்வோர் வசனத்திலே சிறுவர்க்கேற்ப அறநெறிகள் கூறப்பட்டாலும் அறிவு வளர ஔவையார் சுருங்கக் கூறிய ஒவ்வோர் வசனமும் பல பக்கம் வரையப்பட்ட பாடமாக வளர்ந்து வழிகாட்டுவதை நாம் காணலாம்.

''ஆத்திசூடி'' என்பதன் பொருள் திருவாத்திப் பூமாலையைச் சூடிய சிவபெருமான் என்பது. இறைவனது பெயராகிய ''ஆத்திசூடியை'' முதல் தொடராக வைத்துப் பாடப்பட்ட சிறப்பால் அந்தப் பெயராலேயே நூல் அழைக்கப்படுகிறது. சிவபெருமானது முதற் புதல்வர் விநாயகப் பெருமான். கல்வியைக் கற்கத் தொடங்குமுன் இவரை வணங்குதல் மரபு. எக் கருமத்தையும் தொடங்கு முன் விநாயகப் பெருமானை வணங்கவேண்டும்.

வணங்குதலைத் தொழுதல் என்றும் சொல்லலாம். வணங்குதல் இருவகைப்படும். ஒன்று கைகளைச் சிரசின் மேற் குவித்து அஞ்சலி செய்தல். மற்றது கீழே விழுந்து நமஸ்காரம் செய்தல். ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்ய வேண்டும். வணக்கம் செய்யும்போது வாய் இறைவனைப் புகழ்ந்து தோத்திரங்களைச் சொல்லவேண்டும். தோத்திரம் சொல்வதை ஏத்துதல் என்றும் சொல்லலாம். மனம் இறைவனது திருவுருவத்தையே சிந்திக்க வேண்டும். தேகத்தால் வணங்குதலும், வாக்கினால் தோத்திரம் சொல்லுதலும், மனதை இறைவனிடத்திலே பதிக்க உதவுகின்றன. மாணவர் மாத்திரம் இறைவனை வணங்கினாற் போதாது. ஆசிரியரும் சேர்ந்து இறைவனை வணங்க வேண்டும். அப்போதான் மாணவரின் மனதில் ஆசிரியர் கூறுவது நன்கு பதியும். இதனாலே ஔவையார் ஏனைய வசனங்களை முன்னிலையாகக் கூறுவாராயினும் இறை வணக்கத்தில் ''தொழுவோம் யாமே'' என உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாகக் கூறுகிறார்.

# இந்து (சைவ) பல்கலைக்கழகம்........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தல் வேண்டுமென்பதை ஆராய்வோமாகில், பெருந்தொகைச் சைவ மக்கள் வாழும் இடங்கள் வடமாகாணமும், கீழ்மாகாணமுமேயாம். இவற்றுள்ளும் பெருந்தொகைச் சைவர்கள் வாழும் இடம் வடமாகாணமேயாம். வடமாகாணத்திலும் நூற்றிற்கு எழுபத்தைந்து வீதத்திற்கு மேற் கல்வி கற்கும் சைவமாணவர்கள் வாழுமிடம் யாழ்ப்பாணக் குடாநாடேயாம். அது மாத்திரமன்றி, அனேக பள்ளிக்கூடங்களிருக்குமிடமும் யாழ்ப்பாணக் குடாநாடேயாம். ஆகையால் யாழ்ப்பாணக் குடாநாடே இந்து பல்கலைக்கழகம் தாபிப்பதற்குத் தகுந்த இடமென யாதொரு ஆட்சேபனையுமின்றித் தர்க்கரீதியில் எவராலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

அடுத்ததாகப் பல்கலைக் கழகத்தைத் தாபித்துச் செவ்வனே நடாத்தி வருவதற்கு வேண்டிய இடம், பொருள், ஏவல் முதலியன எங்கு ஏராளமாக உண்டோ அந்த இடமே தகுந்ததாக ஏற்றுக்கொள்ளப்படும்.

யாழ்ப்பாணத்தில் சேர். பொன்னம்பலம் இராமநாதனவர்கள் தாபித்துள்ள பரமேஸ்வரக் கல்லூரி, இராமநாதன் கல்லூரிக் கட்டடங்கள் பல்கலைக்கழகம் நடாத்துவதற்குத் தகுந்தனவாயுள்ளன.

சைவத்தையும் கலாசாரத்தையும் பேணிக்காத்து வளர்ப்பதற்கு யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள், சேர். பொன்னம்பலம் இராமநாதனவர்கள், புத்தூர் மழவராயர் அவர்கள் ஏராளமான சொத்துக்களைத் தந்துதவியுள்ளார்கள்.

மேலும் பல்கலைக்கழகத்தில் ஆசிரியர்களாகக் கடமையாற்றக் கூடிய தகுதியுடைய ஆசிரியர்களும் யாழ்ப்பாணத்திலேயே பெருந்தொகையினர் இருக்கின்றனர்.

இதுவரையிற் பல்கலைக்கழகத்திற் கல்வி கற்பதற்கு அனுமதிக்கப்பட்டு வந்த தமிழ்மாணவர்களுள் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமும் யாழ்ப்பாணத்திலுள்ள மாணவர்களேயாம். இது யாவரும் அறிந்த உண்மை.

வடமாகாணத்தில் வாழும் மக்கள் கிறீஸ்தவர்களுட்பட ஒரே குரலுடன் யாழ்ப்பாணத்திலேயே பல்கலைக்கழகத்தைத் தாபிக்க வேண்டுமென விரும்புகின்றார்கள். ஆனால், கீழ்மாகாணத்தில் இருபிரிவினராய் மட்டக்களப்பில் தாபிக்க வேண்டுமென ஒரு சாரரும், திருகோணமலையிலேயே தாபிக்க வேண்டுமென மறு சாரரும் போட்டியிடுகின்றனர். ஆதலால் கீழ்மாகாணம் உள்ளூரிலே சர்ச்சைக்குரியதுமாகும்.

மேற்கூறிய காரணங்களால் யாழ்ப்பாணமே அரசாங்கத்திற்கு அதிகசெலவின்றி ஓர் இந்து (சைவ) பல்கலைக்கழகத்தைத் தாபித்து நடத்துதற்குத் தகுந்த இடமென்பதைச் சுயநலங்கருதாத அரசியல்வாதிகளும், மற்றுந் தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

இஸ்லாமிய சமயத்தையும் கலாசாரத்தையும் பேணிக்காத்து வளர்ப்பதற்கு ஓர் இஸ்லாமிய பல்கலைக்கழகம் நிறுவுதல்வேண்டுமென்னும் ஒரு தீர்மானத்தைப் பாராளுமன்றம் சிலகாலங்களுக்கு முன்னர் நிறைவேற்றியுள்ளதென மேற்கூறியுள்ளோம். அப்படி இருந்தும் இஸ்லாமிய சமயத்தினர் தமிழ் மக்கள் வேண்டி நிற்கும் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய சமயம், கலாசாரம் முதலியவற்றைப் பேணிக்காத்து வளர்ப்தற்கு ஓர் இடம் ஒதுக்கிவைக்க வேண்டுமெனவும் விண்ணப்பித்துள்ளனரென அறிகின்றோம். நாமறிந்த வரையில் அத்தகைய ஒரு விண்ணப்பம் முற்றிலும் அநாவசியமானதென்போம். ஏனெனில், இந்து பல்கலைக்கழகம் என்றால் இந்து கலாசார தத்துவ ஆராய்ச்சிக்கு உதவுமளவுக்கு ஏனைய சமய கலாசார தத்துவ ஆராய்ச்சிகளுக்கும் வசதிகள் கொடுக்கப்படுதல் பல்கலைக்கழகப் பண்பாகும். ஆதலின், அது கேளாமலே அமையும். அங்ஙனமாகவும், இவர்கள் விதந்து கேட்க முன்வந்தமை ஓரளவிற் சந்தேகத்துக்கும் இடனாகின்றது. சமீபத்திற் பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெற்ற சில நிகழ்ச்சி அநுபவங்களைக்கொண்டு சிந்திக்கும்போது இந்து பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய சமய வளர்ச்சிக்கு இடம் கேட்பதை நாம் பணிவுடன் எதிர்க்க வேண்டியுள்ளது. ஏதேனும் அரசியல் விஷமத்தனம் இதற்குப் பின்னணியாயிருக்குமோ என அஞ்சுதலும் நியாயமேயாம். இவ்விடயத்தைப்பற்றிப்பல்கலைக்கழக விசாரணைக் குழு சிந்திக்கும் பொழுது இந்தியாவில் காலந்தோறும் எழும் இந்து இஸ்லாமிய பிரச்சினைகளையும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

ஆகையால், அரசாங்கம் இன்னும் தாமதமின்றி ஓர் இந்து (சைவ) பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாணத்திலேயே தாபித்தல் வேண்டும். இவ்வாறு அகில இலங்கைச் சைவ அனுட்டான பாதுகாப்புச் சபை பல்கலைக்கழக விசாரணைக் குழுவினருக்கு விண்ணப்பித்துள்ளது.

# எதிர்ப்போம்

டாக்டர் மலலசேகரா மூன்றாவது பல்கலைக் கழகம் அவசியந்தானா என்கிறார். கொழும்பிலும் கண்டியிலும் உள்ள பல்கலைக் கழகங்களில் நிலவி வருகின்ற இடநெருக்கடி காரணமாக மூன்றாவது பல்கலைக் கழகம் அவசியம் தேவை. அது எங்கே இருக்கவேண்டியது என்பதுதான் முக்கிய கேள்வி? தலைப்பட்டணமாகிய கொழும்பு குடிசன நெருக்கமுள்ள இடமாகும். அங்கு ஒரு பல்கலைக் கழகம் உண்டு. இலங்கையின் இரண்டாவது சனநெருக்கமுள்ள இடம் கண்டி ஆகும். அங்கும் ஒரு பல்கலைக் கழகம் உண்டு. தமிழ் மக்கள் வாழும் மூன்றாவது சன நெருக்கமுள்ள பட்டணம் யாழ்ப்பாணம் ஆகும். எனவே, மூன்றாவது பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்திலேயே அமைய வேண்டும். இப்படி அமைவதே சாலச் சிறந்தது. அதை விடுத்து மூன்றாவது பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்தில் அமையாது சன நெருக்கமில்லாத காட்டுக்குள் அமையுமானால் அதை நாம் எதிர்ப்போம். அதைத் தெரிவு செய்து எடுப்பவர் எவரோ அதைப் பிழையான வழியில் தேர்ந்து எடுப்பதாக நினைத்து யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களாகிய நாம் அதை எதிர்ப்போம்.

**யாழ்ப்பாண வாசி**

## சமஸ்கிருத அர்ச்சனை....

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

றது என்னையெனின் ஆண்டுப் பயிற்சி மிதியெனக் கொள்க, என்று விளக்கியருளினர்.

மேலும் சேனாவரையமென்ற இலக்கண உரைநூலில் ''வடசொல் எல்லாத் தேயத்திற்கும் பொது'' எனவும் கூறுவனவற்றால் இவ்வுண்மை உணரப்படும்.

### மந்திரங்களின் தோற்றம்

மந்திரமானது வாச்சியமந்திரம், வாசகமந்திரம் என இரு வகைப்படும். மந்—நினைப்பவன், திரம்—காப்பது, எனவே நினைப்பவனைக் காப்பது என்பது பொருளாகும். ஆகவே மந்திரமென்னும் பெயர் நினைப்பவனைக் காக்கும் இயல்புடைய வாச்சிய மந்திரமாகிய சிவனுக்கும் சிவசத்திக்கும் செல்லுமாயினும் வாச்சியத்திற்கும், வாசகத்திற்கும் பேதமில்லாமை பற்றி உபசாரத்தால் வாசக மந்திரத்திற்கும் செல்லும். சிவசத்தி, கரியினிடத்தில் அக்கினி பற்றினாற்போல, சாதனை செய்பவர்களுக்குப் பயன்கொடுக்கும். ஆதலினாலே சிவசத்தியினால் வாசக மந்திரத்தோடு சம்பந்தமுண்டுபடும். அச்சம்பந்தம்பற்றி வாசக மந்திரம் சாதனை செய்பவருடையதியான பூசைகளினிமித்தமாகச் சிவபெருமானுக்குச் சொல்லப்பட்ட உபசார வடிவமுமாம்; சிவசத்தி சுத்தமாயையிலே நின்று மந்திரங்களைத் தோற்றுவித்தருளுகின்றமையாலும், ஒவ்வொரு மந்திரத்தையும் செலுத்துகின்றமையாலும் சாதிப்பவர் விரும்பிய பலனைக் கொடுக்கும் சத்தி மந்திரங்களுக்கு உண்டாயிற்று.

(தொடரும்)

பத்திராதிபர் சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் அச்சுவேலி. நல்லூரில் வசிக்கும் திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம் அவர்களால் யாழ்ப்பாணம் ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தில் 1-1-70 இல் அச்சிட்டு சுன்னாகத்தில் வசிக்கும் அகில இலங்கைச் சைவஅனுட்டான பாதுகாப்புச் சபைத் தலைவர் திரு. த. சிவலிங்கம் J. P. அவர்களால் வெளியிடப்பட்டது.